# தமிழ் நாடு தகவல் ஆணையம்

காமதேனு கூட்டுறவு சிறப்பங்காடி முதல் தளம்,, புது எண் 378, அண்ணா சாலை, தேனாம்பேட்டை சென்னை-600018. (தபால் பெட்டி எண் 6405 தேனாம்பேட்டை)

*தொலைபேசி எண் 24357580.*


**வழக்கு எண். 15372 / விசாரணை / 2009**

**<u>விசாரணை நடைபெற்ற நாள் 24.09.09.</u>**

**முன்னிலை :** **திரு.தி.சீனிவாசன். எம்.எஸ்சி.,**<br>**மாநில தகவல் ஆணையர்**

**மனுதாரர் :** **திரு. எஸ். எம். ராஜா,**<br>**எண். 17, வெற்றி முருகன் நகர்,**<br>**விளாங்குறிச்சி**<br>**ரத்னகிரி ரோடு,**<br>**சரவணம்பட்டி அஞ்சல்,**<br>**கோவை – 641 035.**

**பொது அதிகார அமைப்பு :** **பொதுத் தகவல் அலுவலர்,**<br>**இணை ஆணையர் அலுவலகம்,**<br>**இந்து சமய அறநிலையத் துறை,**<br>**கோவை – 18.**

**-------**

மனுதாரர் திரு. எஸ்.எம். ராஜா விசாரணைக்கு வரவில்லை. திரு. C.G. நவநீத கிருஷ்ணன், மேலாளர், இணை ஆணையர் அலுவலகம், இந்து சமய அறநிலையத் துறை, கோவை இவ்வாணையத்தில் இன்று (24.09.09) நடைபெற்ற விசாரணைக்கு வந்திருந்தார்.

மனுதாரர் 23.05.09 அன்று 4 இனங்களில் ஒரு குறிப்பிட்ட கோயிலில் காணிக்கையாக வரப்பெற்ற சில பொருட்களின் விவரங்கள் தகவலாக கேட்டு பொதுத் தகவல் அலுவலரிடம் மனு செய்துள்ளார். மனுதாரருக்கு 02.06.09 அன்று தகவல்

தரப்பட்டுள்ளன. மனுதாரர் 26.06.09 அன்று இவ்வாணையத்திற்கு அனுப்பிய மனுவில் ஒரு சில ஆவண நகல்கள் தரப்படவில்லை என்று மேல்முறையீடு செய்த மனு இன்று (24.09.09) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணைக்கு மனுதாரர் வராததால் பொதுத் தகவல் அலுவலரிடம் விசாரிக்கப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் மனுதாரர் கேட்டுள்ள ஆபரணங்களின் விவரங்கள் முழுவதும் தரப்பட்டதாகவும், ஒரு சில பதிவேடுகளின் நகல்கள் இரகசியமாக பாதுகாக்கப்பட வேண்டியவை என்பதால் தரப்படவில்லை என்றும் தெரிவித்தார். சம்பந்தப்பட்ட ஆவணங்கள் விசாரணையின் போது பார்வையிடப்பட்டது. சம்பந்தப்பட்ட ஆவணங்களில் நகைகள் வைக்கப்பட்டுள்ள இடங்கள், அந்த நகைகள் யாருடைய கட்டுப்பாட்டில் பூட்டப்பட்டு வைக்கப்பட்டுள்ளது என்ற விவரமும், குறிப்பாக சாவி எண் உள்பட மற்ற முக்கிய விவரங்கள் அதில் உள்ளது அறியப்பட்டது. பொதுத் தகவல் அலுவலர் விசாரணையில் தெரிவித்தது போல மனுதாரர் கோரும் ஆவணங்களின் நகல்கள் வழங்கப்படின் அவைகள் சம்பந்தப்ப.ட்ட நகைகளின் பாதுகாப்பிற்கு குந்தகம் ஏற்படும் என்று பொதுத் தகவல் அலுவலர் தெரிவித்ததை சம்பந்தப்பட்ட ஆவணங்களில் உள்ள விவரங்களை விசாரணையின் போது பார்வையிடப்பட்டது. மனுதாரர் கேட்டுள்ள விவரங்கள் ( Inventory of Jewels and Other Valuable Articles ) " நகைகளின் பொருள் விவரப்பட்டியல் மற்றும் இதர விலைமதிப்புள்ள பொருள்கள் " என்ற பதிவேட்டில் உள்ள விவரங்கள் ஆகும். மனுதாரருக்கு சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் உள்ள ஆவணங்களின் நகல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். பொதுத் தகவல் அலுவலர் கூறியது போல் சம்பந்தப்பட்ட ஆவணங்களில் நகைகள் வைக்கப்பட்டுள்ள இடங்கள், அந்த நகைகள் யாருடைய கட்டுப்பாட்டில் பூட்டி வைக்கப்பட்டுள்ளது, சாவி எண் ஆகிய சில விவரங்கள் பாதுகாப்பிற்கு குந்தகம் விளைவிக்கும் என கருதுப்படுவதால்

அவ்விவரங்களை தவிர்த்து மனுதாரர் கேட்டுள்ள ஆவண நகல்களை சம்பந்தப்பட்ட பதிவேடுகளில் இருந்து இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வாரத்திற்குள் மனுதாரருக்கு அளித்து அதன் விவரத்தை இவ்வாணையத்திற்குத் தெரிவிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையிடப்படுகிறது.

**ஒப்புதல் பெறப்பட்ட நாள் 30.09.09**
**ஆணையத்தின் ஆணைப்படி**

**தமிழ்நாடு தகவல் ஆணையம்**

**( சு. மோகன தாஸ் )**
**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். 15372/09</u>**

**பெறுநர்**

**பொதுத் தகவல் அலுவலர்,**
**இணை ஆணையர் அலுவலகம்,**
**இந்து சமய அறநிலையத் துறை,**
**கோவை – 18.**

**திரு. எஸ். எம். ராஜா,**
**எண். 17, வெற்றி முருகன் நகர்,**
**விளாங்குறிச்சி**
**ரத்னகிரி ரோடு,**
**சரவணம்பட்டி அஞ்சல்,**
**கோவை – 641 035.**